## புதுச்சேரி அரசு
## பள்ளிக் கல்வி இயக்ககம்

புதுச்சேரி, 07-06-2017

## செய்திக் குறிப்பு

நடைபெறவுள்ள ஜூன்/ஜூலை - 2017, மேல்நிலை சிறப்புத் துணைத் தேர்விற்கு தேர்வெழுத தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களுக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கத் தவறி, தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்களிடமிருந்து சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (Takkal) மூலம் ஆன்-லைனில் (Online) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்பிக்க தகுதியானவர்கள்:**

1. மார்ச் 2017 மேல்நிலைத் தேர்வினை பள்ளி மாணாக்கராகவோ அல்லது தனித்தேர்வராகவோ தேர்வெழுதியிருக்க வேண்டும்.
2. மார்ச் 2017 மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறாத/வருகைபுரியாத அனைத்துப் பாடங்களையும் உடனடித் தேர்வில் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.
3. மார்ச் 2017, மேல்நிலைத் தேர்வெழுதியவர்கள் தங்களது தற்காலிக மதிப்பெண் சான்றிதழின் நகலினையும், தேர்வெழுதாதவர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினையும் கண்டிப்பாக கொண்டுவர வேண்டும்.

**இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் அனைத்து தனித் தேர்வர்களுக்கும் திருநெல்வேலி, மதுரை, கோவை, திருச்சி, கடலூர், வேலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மட்டுமே தேர்வு மையம் அமைக்கப்படும்.**

புதுச்சேரி கல்வி மாவட்டத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் முகவரியில் இயங்கும் சிறப்பு சேவை மையத்திற்கு **08-06-2017 (வியாழக்கிழமை) மற்றும் 09-06-2017 (வெள்ளிக்கிழமை)** ஆகிய **இரண்டு நாட்கள்** மட்டும் **காலை 9.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை** நேரில் வந்து ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**"மேல்நிலைக் கல்வி தேர்வுப் பிரிவு"**
**நான்காம் தளம், பி – பிரிவு,**
**பள்ளிக் கல்வி இயக்ககம்,**
**அண்ணா நகர், புதுச்சேரி – 5.**

தனித்தேர்வர்கள் தனியார் கணிணி மையம் (Private Browsing Centre) மூலம் விண்ணப்பிக்க இயலாது. இம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சேவை மையத்தின் மூலம் மட்டுமே ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை :-**

- ❖ விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50 தேர்வுக் கட்டணமும், இதர கட்டணம் ரூ.35 ம் பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.
- ❖ தேர்வுக் கட்டணத்துடன் கூடுதலாத சிறப்பு அனுமதி கட்டணமாக ரூ. 1000/- மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ. 50/- பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
**இணை இயக்குநர்**

இந்த செய்தியினை தங்களது நாளிதழ் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
**இணை இயக்குநர்**